முருகப்பெருமான் துணை

**மகான் திருமாழிசை ஆழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.01.2022**, புதன்கிழமை

1. ஞானவான்கள் படைகள் தனை
ஞாலமுடன் உலகமெங்கும் உருவாக்கி
ஞானயுகம் படைக்க அவதரித்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் துல்லிய ஆசிதனை
வரங்களென பிலவ கலைதிங்கள்
வல்லமைபட சஷ்டிதிகதி புந்திவாரம்
(பிலவ வருடம் தை மாதம் 6ம் நாள், 19.01.2022 புதன்கிழமை)
3. வாரமதில் திருமாழிசை ஆழ்வாரும்
வழங்குவேன் உலகநலம் காண
பாரதமெங்கும் அரங்கன் சக்தி
பரபிரம்ம மகா சக்தியாகப் பரவி
4. பரவியே பேரிடரை காக்கும்
பரிபூரண பாதுகாப்புமிக்க
அறமாக வரமாக இருக்க
அகிலத்தார் அரங்கனை நாடி
5. நாடியே உயர் தீட்சை ஏற்று
நாளும் ஞானிகளின் பேரை
இடைவிடா பூசையாகச் செபிக்க
இயன்ற தருமமும் செய்துவர
6. வருகவே மனபலம் தேகபலமும்
வாழும் காலம் மற்றவர்க்கு
தருகின்ற குணமும் தன பலமும்
தரணியில் தனித்துவமும் கண்டு உயர்வர்
7. உயர்வான பூசை பலனாக
உண்மை ஞான வழிகளை
தயவாக தொடர்ந்து கடைபிடிக்க
தன்னலமின்றி வாழும் மனிதனாக
8. ஆகவே பொது நலவாழ்வில்
அனைவருக்கும் சேவை ஆற்றும்
மகத்துவம் கூடி இனிதே
மகானுமாக மாற்றம் தேற்றம்
9. தேற்றம் உலகோர் அரங்கன் வழி
தொடர்ந்துவர அடைய நேரும்
ஆற்றல் பெருக்கம் அதி சூட்சுமம்
அமைதிமிக்க பாதுகாப்பு நிறைந்த

10. நிறைந்த வாழ்வை அடைய
நிலவுலகில் மற்றவர்க்கும் உலகில்
குறைவின்றி இந்த சக்தி அருள
குருவரங்கன் சீடர்களாகி மக்கள் வர

11. வருகவே நிலைமைகள் மாறும்
வையகமே பாதுகாப்புப் பெற்று
முருகப்பெருமான் ஆளுமை காணும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–